**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 4723 /ஆ5/2024, நாள். 25.11.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 15 முதல் 22 வரை) அனுசரிக்கப்படுகிறது – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை நிலை (1டி) எண். 83, பள்ளிக் கல்வித் துறை நாள். 17.06.2024
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.69199 /எம்/இ1/2024, நாள். 22.11.2024

•••••

பார்வை 1-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2-ன் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 15 முதல் 22 வரை) அனுசரிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி அளவிலான இடை பருவத் தேர்வுகள் காரணமாக குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் விழிப்புணர்வு வாரம் இவ்வாண்டு நவம்பர் 25 முதல் 29 வரை அனைத்து வகை பள்ளிகளும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் கொண்டாடுவதற்கு பள்ளித் தலைமையாசிரியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டம்.

<u>விழிப்புணர்வு வாரத்தில் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.</u>

1. பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஏதேனும் ஒரு குழு பொறுப்பு ஆசிரியர் (House Head Teacher) "மாணவர் மனசு" திட்டம் சார்ந்து விளக்க உரை காலை வணக்கக் கூட்டத்தில் இடம் பெற வேண்டும்.
2. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு (Student Safeguarding Advisory Committee) பள்'ளி அளவிலான குழுவில்
   - தலைமையாசிரியர்
   - ஆசிரியர்கள் – 2
   - பெற்றோர் ஆசிரியர் கழகம் / பெற்றோர் உறுப்பினர் – 2
   - பள்ளி மேலாண்மை குழு பிரதிநிதி – 1
   - ஆசிரியரல்லா பணியாளர் – 1
   - வெளி நபர் (தேவை எனில் ) – 1

இடம் பெற்றுள்ளனர். இக்குழு கூட்டத்தினை விழிப்புணர்வு வாரத்தில் ஏதேனும் ஒரு நாள். பெற்றோர்களின் வசதிக்கேற்ப 28.11.2024 அல்லது 29.11.2024 நடத்தி அறிக்கை மாவட்ட கல்வி அலுவலருக்கு தலைமையாசிரியர்கள் அனுப்பிட வேண்டும். "மாணவர் மனசு" பெட்டியில் பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் புகார்களை இக்கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்களுடன் விவாதித்தல் வேண்டும். உரிய நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும். பள்ளிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையினை தொகுத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. பதிவேட்டில் உரிய விவரங்களை பதிந்து பின்வரும் படிவத்தில் அவ்வப்போது அறிக்கை மாவட்டக கல்வி அலுவலருக்கு அனுப்பிட வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) அதனை தொகுத்து இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு
(மாணவர் மனசு பெட்டிகள் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் விவரம்)

பள்ளியின் பெயர் –

| வ. எண். | நாள். | திறக்கப்பட்ட நேரம் | பெறப்பட்ட மனுக்கள் எண்ணிக்கை | கோரிக்கை விவரம் | எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(குறிப்பு – மேற்காண் விவரங்கள் 14417 எண்ணிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரமும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.)

4. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு பள்ளியில் பாலியல் புகார் சார்ந்து ஏதேனும் தகவல் பெறப்படின் அதனை உடனடியாக 14417, 1098 ஆகிய எண்ணை தொடர்பு கொண்டு தகவல்களை அளித்தல் வேண்டும்.
5. மாணவர்களிடையே குழந்தைகள் உதவி மையம் எண். 1098 மற்றும் 14417 ஆகிய எண்கள் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
6. இணையதள பாதுகாப்பு – மாணவர்கள் இணையதளத்தில் உள்ள தகவல்களை பாதுகாப்பாக எவ்வாறு கையாளுவது மற்றும் இணையதள பாலியல் வன்முறைகளை தவிர்ப்பது எவ்வாறு என்பது சார்ந்து மகிழ் முற்றம் செயல்பாடாக குழு வாரியாக விவாதம் நடத்தி குழுத் தலைவர்கள் கருத்து கண்காட்சி வகுப்பறையில் காட்சிப்படுத்துதல்.

7. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (Posters) சுவரொட்டிகள் நகலினை மாணவர்கள் அறியும் வண்ணம் வகுப்பறைகளில் இடம்பெறச் செய்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளித் தகவல் பலகையிலும் / வகுப்பறைகளிலும் பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண். 14417 மற்றும் 1098 குழந்தைகளுக்கான அவசர உதவி எண்ணினை குறித்திடவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சார்ந்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களை 05.12.2024-க்குள் அறிக்கையாக அளிக்க மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு -

1. படிவங்கள்
2. பார்வை 2-ன் கடித நகல்
3. சுவரொட்டிகள் (Posters)

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவல மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்.

1. சென்னை -6, பள்ளிக் கல்வி இயக்குநர்
2. அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.

படிவம் –1

| வ. எண். | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு கூட்டம் நடத்திய பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு கூட்டம் நடத்தாத பள்ளிகளின் எண்ணிக்கை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

படிவம் –2

| வ. எண். | மாவட்டம் | மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் மனசு பெட்டி உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட மனுக்கள் எண்ணிக்கை | கோரிக்கை விவரம் | எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# தொடுதல் பற்றிய ரகசியம்






உங்களை விருப்பமில்லாமல் மற்றவர் தொடுவதை ரகசியமாக வைப்பது பாதுகாப்பு இல்லை யாராவது அதை ரகசியமாக வைக்கச் சொன்னால் உடனே நீங்கள் உங்களுக்கு நெருக்கமானவர்களிடம் மறைக்காமல் சொல்லி விட வேண்டும்.

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

**14417**


குழந்தைகளுக்கான அவசர உதவி எண் **1098**

பள்ளிக் கல்வித் துறை (TNSED)

| @tnschoolsedu


/dsdtnscps

# மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்
## சமூகப் பாதுகாப்பு துறை






குழந்தைகளே !
நீங்கள் தனியாக
இல்லை, உதவிக்கு
1098 அழைக்கவும்
Call
1098
1098 என்பது
24 மணி நேர
தேசிய
கட்டணமில்லா
அவசர உதவி
எண் ஆகும்.


ஆஹா! அவர்
என்னை
தொடவில்லையே!
குழந்தைகள்
உதவி எண்
1098க்கு
அழைத்து புகார்
அளிக்கலாம்.
/CWSS_SCTS

# பெற்றோர்களே!
# பெண் குழந்தைகளை
# மதிப்பதற்கு



# உங்கள் ஆண் குழந்தைகளுக்கு
# கற்றுக்கொடுங்கள்

மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்,
சமூக பாதுகாப்பு துறை, தமிழ்நாடு அரசு

# POCSO ACT 2012



போக்சோ
சட்டத்தின் கீழ் ஒரு
குற்றம் நடந்தாலோ
நடக்கப்படலாம்
என்று தெரிந்தாலோ
அத்தகவல்களை
காவல்துறைக்கு /
சம்பந்தப்பட்ட
அதிகாரிகளுக்கு
வழங்க வேண்டும்.

## குழந்தைகளுக்கு நடக்கும் பாலியல் வன்கொடுமை பற்றி தெரியவந்தால் நான் உடனே புகார் அளிப்பேன்

@/dsdtnscps

மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்
சமூகப் பாதுகாப்பு துறை | தமிழ்நாடு அரசு